# “கருத்தைக் கருத்தால் சந்திப்போம், சொல்லைச் சொல்லால் சந்திப்போம்” என்ற கலைஞரின் முழக்கம்!

ஆட்சி நிர்வாகத் திறனில் கலைஞரின் ஆளுமை அசாத்தியமானது. அறிஞர் அண்ணாவுக்குப் பின் கழகத்தின் கொள்கைகளை ஆழமாகப் பிடித்து நிற்கும் வலுவான தலைவர் எனப் பத்திரிகைகள் புகழ்ந்தன. இந்தித் திணிப்பு எதிர்ப்பிலும் மாநிலங்களின் உரிமையிலும் தொடர்ச்சியாக ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுப்பவராக அவர் இருந்தார்.

**மாநிலங்களின் சுயாட்சி குறித்து, இந்திய ஜனநாயகத்துக்கு வகுப்பு எடுத்தவர் கலைஞர்தான். மாநிலங்களுக்கு உள்ள உரிமை, ஒன்றிய அரசுக்கு உள்ள கடமை ஆகியவற்றில் ஒரு தெளிவு ஏற்படுத்த வேண்டி 1974-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். மிகப்பெரிய விவாதத்தை நடத்தி இந்தியாவுக்கே வகுப்பு எடுத்தார். முதலமைச்சர் என்கிற முறையில் அவர் கலந்துகொண்ட கூட்டங்களில் எல்லாம் அதில் உள்ள நியாயங்களை எடுத்துச் சொல்வதற்கும் தவறவில்லை.**

1967-தேர்தலில் ஆட்சி மாற்றம் புதிய அரசியல் சிந்தனை, இளையோரின் எழுச்சியால் நிகழ்ந்தது என்றால், 1971-தேர்தல்தான் கழகத்தின் நீண்ட கால இருப்பை உறுதி செய்தது. ஆனால்,அதை வென்றெடுக்க அண்ணா இல்லை. ராஜாஜியும் காமராஜரும் இணைந்து வலுவான கூட்டணி அமைத்தனர்.

இன்னொரு பக்கம், அந்தத் தேர்தல் நெருக்கத்தில் ஒரு போராட்டத்தின் போது ராமர் சிலைக்குப் பெரியார் செருப்பு மாலை அணிவித்தார் என்று பிரச்சாரம் செய்யப்பட்டு கலைஞரை அகற்ற முழு முயற்சிகள் நடந்தன. தேர்தலில் வெற்றி பெறுவது மட்டுமே அவரது இலக்காக இருந்தது.

30 நாட்களுக்கு மேல் வாகனத்திலேயே தமிழ்நாடு முழுவதும் இரவு பகல் பாராது பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார். விடியற்காலை 5 மணிக்கு எங்காவது ஓரிடத்தில் குளித்துவிட்டு சாலை ஓரத்தில் சாப்பிடுவது, ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊருக்குச் செல்லும் இடைவெளியில் சின்ன உறக்கம். வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் பிரச்சாரம் செய்தார். அந்தத் தேர்தலில் கழகத்துக்கு 184 இடங்கள் கிடைத்தன. ஆனால், அந்த வெற்றி அவரைக் கொஞ்ச நாட்களுக்குத் தூங்க விடவில்லை. வெற்றி மயக்கத்தால் அல்ல, கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பத்தால் அவருக்கு மீண்டும் நெருப்பாற்றை நீந்த வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது.

**“மறைந்தும் ஒளிந்தும் டெல்லியால் தூண்டி விடப்பட்டும் தொடங்கப்பட்ட அந்தத் துரோகத்தின் முழு உருவம் 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் வெளிப்பட்டது” என அந்த நிகழ்வை குறிப்பிடுகிறார் கலைஞர். அந்த நிகழ்வு கட்சியைப் பிளவுபடுத்தியது மட்டுமல்ல, ஆட்சிக்கும், கலைஞருக்கும் நெருக்கடியைக் கொண்டு வந்தது.**

நம்பிக்கை இல்லா தீர்மானத்தைத் தன் நம்பிக்கைக்கு உரியவர்களே கொண்டு வருகையில் ஒரு தலைவனாக அதைத் தாங்குவது சாதாரணமானதல்ல. அதையும் கடந்தார் கலைஞர்.

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதுதான் தமிழ்நாட்டில் தொழில்துறை வளர்ச்சிக்குத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டது. 1971-ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் இந்தியாவிலேயே முதன்முதலாக ‘மாநிலத் திட்டக் குழு’ என ஒன்றை அறிவித்தார். ஆட்சி நெருக்கடி, கட்சி நெருக்கடி என ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும், நிர்வாகத் திறனில் அவருக்கு இருந்த முனைப்பு அவ்வப்போது புதியவற்றை உருவாக்கிக் கொண்டே இருந்தது. இடையில் தஞ்சையில் ‘ராஜராஜனுக்கு விழா’, ‘பூம்புகார் இந்திர விழா’ என இலக்கிய விழாக்களும் அவரது நாட்களை எடுத்துக் கொண்டன.

அவர் மிகவும் நேசித்த காயிதே மில்லத், மூதறிஞர் ராஜாஜி, அவர் அரசியல் பயின்ற. நெருக்கடிகளின்போது உடன் நின்ற தந்தை பெரியாரின் மரணம் எல்லாம் அவரைத் தனித்து விடப்பட்டவராக மாற்றிக் கொண்டே இருந்தன. கலைஞரின் மத்திம வயதில் அவர் எதிர்கொண்ட எல்லாவிதமான நெருக்கடிகளிலும் மிக உச்சமானது மிசா காலமாக உள்ளது. செயல்பாடுகளில் வேகம் கொண்ட அவர், அவற்றுள் நிதானத்தையும் சாதுர்யத்தையும், எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும் சளைக்காத இதயத்தையும் அப்போதுதான் பெற்றார். நெருக்கடி நிலையை எதிர்த்து முதன் முதலாகக் கட்சிரீதியாகத்தீர்மானம்நிறைவேற்றியவர் கலைஞர்.



தமிழ்நாட்டைத் தவிர மற்ற மாநிலங்களில் கொத்துக் கொத்தாக எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாட்டில் நெருக்கடி நிலையைத் தடுத்து நிறுத்தியதுடன், 1975-ஆம் ஆண்டு ஜூலை 6-ஆம் தேதி சென்னை கடற்கரை சீரணி அரங்கத்தில் நெருக்கடி நிலைக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டம் ஜனநாயகத்தைக் காக்க அவர் காட்டிய முனைப்பின் உச்சம்.

**“எழுதுகோல்களை முறிக்கின்ற சட்டத்தை, நாக்குகளை அறுக்கின்ற சட்டத்தை, கழகம் விரும்பவில்லை. கருத்தைக் கருத்தால் சந்திப்போம், எழுத்தை எழுத்தால் சந்திப்போம், சொல்லைச் சொல்லால் சந்திப்போம்” என அந்தக் கூட்டத்தில் கலைஞர் முழங்கினார். ஆட்சி கலைக்கப்படும் என்கிற எந்த மிரட்டலுக்கும் அவர் அஞ்சவில்லை.**

1976-ஆம் ஆண்டு தமிழ்நாடு, வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளதை யாவரும் அறிவோம். நினைத்துப் பாருங்கள்; அவர் ஆசை ஆசையாகப் பார்த்துப் பார்த்து செதுக்கிய வள்ளுவர் கோட்டத்தின் திறப்பு விழா நிறுத்தப்பட்டது. திறக்கப்படும் நாளில் அவர் அழைக்கப்படவில்லை. **“கூடம் திறக்கப்படுகிறது குறளோவியம் தீட்டப்படுகிறது”** என அங்கிருந்து ஒரு கிலோ மீட்டரில் உள்ள ‘முரசொலி’ அலுவலகத்தில் இருந்து கடிதம் எழுதினார். சாதாரண மனிதர்கள் அந்த மன அழுத்தத்தில் துவண்டிருப்பார்கள். ஆனால், மிகப் பெரும் மகிழ்ச்சியையும் மன அழுத்தத்தையும் நிதானமான எழுத்தில் காட்டினார் கலைஞர்.

ஆட்சி கலைக்கப்பட்ட இரண்டு நாளில் பத்திரிகைத் தணிக்கையைச் சமாளிக்க அவர் கைக்கொண்ட உத்தி அந்த நேரத்தில் யாராலும் யோசிக்க முடியாத ஒன்று. **“அண்ணா சதுக்கத்திற்கு மலர் வளையம் வைக்க வர இயலாதோர் பட்டியல்”** என்று குறிப்பிட்டு, மிசாவில் கைதானவர்கள் பட்டியலை அறிவித்தார்.

முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். அவர் வீட்டில் இருந்து முரசொலி மாறனும், இப்போதைய முதலமைச்சரும் சிறைக்குச் சென்றனர். சொந்த உறவுகளின் சிறைக் கொட்டடியைத் தாங்கிக் கொண்டே, கொள்கை உறவுகளைச் சந்திக்க, கழகத்தினரின் குடும்பங்களைச் சந்திப்பதற்காகப் புறப்படுகிறார்.

கட்சியிலிருந்து கலைஞர் விலகிவிட்டால், கட்சிக்கு ஆபத்து வராது என்பது அப்போது அளிக்கப்பட்ட நிபந்தனை. அதை அவரிடமே பேசுவதற்கு அழைப்பும் வருகிறது. அந்த நெருக்கடியான காலங்களில் கழகத்தினர் காட்டிய அன்பு ஒன்றே அவரை மீட்டுக் கொண்டு வந்தது.

**அவரது வாழ்க்கையில் அதிக இன்னல்களைச் சந்தித்தது, அந்தப் பத்தாண்டுகள்தான். அதற்குப் பின்னர் ஆட்சி அதிகாரம் இல்லை என்றாலும், தொடர்ச்சியான செயல்பாடுகளால் கழகத்தைத் தகவமைத்தவர்.** 1991 ஆட்சிக் கலைப்பின் போதும், 1993 கட்சிப் பிளவின் போதும் முன்பு போல அதிக



நீரை.மகேந்திரன்

நெருக்கடியை அவர் எதிர்கொள்ளவில்லை. ஏனெனில், அதற்கு முன்பே அவர் எஃகு போன்ற இருதயத்தைப் பெற்றுவிட்டார்.

கலைஞரைப் பற்றிச் சொல்வதெனில், தந்தை பெரியார் மறைவின்போது கலைஞர் எழுதிய குறிப்பையே இங்கு குறிப்பிடலாம்.

**“தந்தை பெரியார் தன்னுடைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார். 95 ஆண்டுகள் வரை வாழ்ந்த அந்தப் பகுத்தறிவுச் சிங்கம் கடைசி மூச்சு வரையில் சமுதாயப் பணியை நடத்திய சரித்திரத்தை யாரும் மறுக்க முடியாது. இன்று தமிழ்நாடு தன்மான உணர்வோடு தலைதூக்கி நிற்பதற்கு காரணமாக இருந்த மாபெரும் தலைவர் தன் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார். நாம் தொடர்வோம்” என்றார். அந்த இரங்கல் குறிப்பு கலைஞருக்கும் பொருந்துவதுதான். ஒரு கோட்பாட்டின் தொடர்ச்சி, கொள்கைப் பிடிப்பின் தொடர்ச்சி. அந்தக் கொள்கையில் மலையென உயர்ந்தவர் கலைஞர்!**

## தந்தை பெரியார் !

“பாம்பும் கீரியும் கடுமையாகச் சண்டை போட்டுக்கொண்டு, கடைசியில் பாம்பு செத்து விடும் என்றாலும்; கீரியின் உடலில் பாம்பின் விஷம் பரவியிருக்குமென்றும்; - அந்த விஷத் தன்மையைப் போக்கிக் கொள்ள கீரி, தனக்கு மட்டுமே தெரிந்த ஒரு மூலிகையின் மீது விழுந்து புரண்டு உடலைத் தேய்த்துக் கொண்டு, விஷத்தின் வலிமையைப் போக்கிக் கொள்ளும்” என்றும் பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது எவ்வளவு உண்மையோ எனக்குத் தெரியாது - ஆனால் நான் பகுத்தறிவு இயக்கத்தில் இனமான உணர்வுடன் பணியைத் தொடருபவன் என்பதால், பல முனைகளில் இருந்து பல்வேறு வகையான கணைகள் பாய்ந்து; அதனால் ஏற்படும் காயங்களின் நச்சுத் தன்மையைப் போக்கிக் கொள்ள; கீரிக்குக் கிடைப்பதாகக் கூறப்படும் மூலிகை போல; எனக்குக் கிடைத்திடும் மூலிகையாகத் தந்தை பெரியாரைத்தான் கருதிக் கொள்கிறேன்.



மூலிகை மட்டுமா பெரியார்? மூட்டை மூட்டையாக அடுக்கப் பட்டிருந்த மூடநம்பிக்கைக் கந்தகக் கிடங்கில் மூட்டப்பட்ட தீப்பிழம்புக்கு, முதன்முதலாகக் கிழிக்கப்பட்ட தீக்குச்சி அல்லவா ! ஊழிக் காற்றெனப் படுவதால் உரசப்பட்ட எரிமலைகளைக்கூட, உதைபந்தாக உருட்டித் தள்ளும் பலம் வாய்ந்த பகுத்தறிவுத் தலைவர் அல்லவா !

-கலைஞர்